சினிமாத் தொழிலை தேசியமயமாக்குதல்

திரு. பி. எத்திராஜ் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

சினிமாத் தொழிலையும், சினிமா தியேட்டர்களையும் தேசியமயமாக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்பொழுது இல்லை.

திரு. பி. எத்திராஜ் : தலைவரவர்களே, இப்போழுது இல்லை என்ற பதிலை விட இப்போதுள்ள அரசாங்கத்தின் பொருளாதார நெருக்கடியை உத்தேசம் பண்ணி அந்தந்த ஜில்லாக்களின் தலைநகரில் உள்ள தியேட்டர்களை தேசியமயமாக்கும் அடிப்படையில், இப்பொழுது பஸ்களை அரசாங்கம் தனியாரிடமிருந்து எடுத்துக்கொண்டிருப்பதைப் போல் முக்கியமான இடங்களிலாவது ஏற்றுக்கொள்வதின் மூலம், அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். அதை ஏற்று நடத்த அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, மற்ற மாநிலங்களில் இது போன்ற தியேட்டர்களை சர்க்கார் தேசியமாக்கி நடத்துக கொண்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அவைகள் எப்படி நடை பெறுகிறது என்பதையறிந்து பிறகு இங்கும் அதுபோல செய்ய சர்க்கார் முனவரலாம்.

திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார் : தலைவரவர்களே, படப்பிடிப்புத் தொழிலில் லாபத்தை நோக்கமாகக் கொண்டு கீழ்த்தரமான உணர்ச்சி களுககு இடம் அளிக்கும் வகையில் அது போய்க்கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகையால் சமூகத்தில் நல்ல கருத்து பரவும் வகையில் படங்கள் எடுக்கும் வேலையை சர்க்காரே மேற்கொள்ள முன் வருவார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட திட்டம் இப்போதில்லை. இப்போதிருக்கிற உத்தேசமெல்லாம் தியேட்டர்களை மட்டும் தேசியமயமாக்கும் முறையில்தான் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. சினிமாத் தொழிலை தேசியமாக்கும் திட்டம்பற்றி இப்போது உத்தேசமில்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, வெளி மாகாணங் களில் கொட்டகைகளை நடத்துவதாக தகவல் வந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கொட்டகையைமட்டும் நடத்துகிறார்களா? அல்லது படப்பிடிப்பையும் அவர்களே நடத்துகிறார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கொட்டகையை மட்டும் தான் நடத்திக்கொண்டுவருவதாக தகவல் கிடைத்துள்ளது.

திரு. கே. ராமதாஸ் : தலைவரவர்களே, சினிமா கொட்டகைகளை ஏற்று நடத்த சர்க்கார் உத்தேசிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட் டார்கள். கொட்டகைகளை ஏற்று நடத்துவதில் நஷ்டம் ஏற்படும். ஆகை யால் சினிமா ஸ்டுடியோக்களை ஏற்று நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்த உத்தேசம் இப்போ தில்லை.

Indian Medical Practitioners, Kanyakumari district

*** 126 Q.—THIRU M. SANKARALINGAM PILLAI :** Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government are aware of the fact that even though it has been laid down that the Indian Medical Practitioners serving in Kanyakumari District who are registered under the

28th February 1968]

former Travancore-Cochin Government Medical Act should be included in the register maintained by the Central Board of Indigenous Medicine, Madras, as per G.O. Ms. No. 556, Health, dated 6th March 1961, a few of such medical practitioners have not been duly included in the Register;

(*b*) the number of such Medical Practitioners;

(*c*) whether any representation has been received from them; and

(*d*) the action taken thereon?

கன்னியாகுமரி மாவட்ட இந்திய முறை வைத்தியர்கள்

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பணி புரியும் இந்திய முறை வைத்தியர்களில், முன்னுள் திருவிதாங்கூர்–கொச்சி அரசாங்கம் மருத்துவச் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களை, சென்னை மத்திய இந்திய மருத்துவக் குழுவால் ஏற்படுத்தப்பட்டுள்ள பட்டியலில் (**Register maintained by the Central Board of Indigenous Medicine, Madras**) சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று **G.O. Ms. No. 556, Health, dated 6th March 1961**-ல் தெளிவுபடுத்தியிருந்தும், இந்த வரம்புக்குட் பட்ட மருத்துவர்களில் சிலர் முறைப்படி பட்டியலில் சேர்க்கப்படாமலிருப்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா?

(இ) அவர்களின் எண்ணிக்கை என்ன?

(உ) அவர்களிடமிருந்து முறையீடு ஏதேனும் வந்ததுண்டா?

(எ) அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாஷா: (அ) சென்னை மத்திய இந்திய மருத்துவக் குழுவால் ஏற்படுத்தப்பட்டுள்ள பட்டியலில் (**Register maintained by the Central Board of Indigenous Medicine) G.O. No. 2420, Health, dated 6th April 1962** (**1962**-ம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ம் தேதியுள்ள) உத்திரவுப் பிரகாரம் விண்ணப்பம் செய்தவர்களைச் சேர்த்துக்கொள்ளப் பெறுகிறது. அரசினரின் மேற்கண்ட உத்திரவுக்கேற்ப ஒரே ஒருவரிடமிருந்து தான் விண்ணப்பம் வந்திருக்கிறது. இதர மருத்துவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவில்லை. விண்ணப்பங்கள் வந்தால் பொருத்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(இ) முன்னுள் திருவிதாங்கூர்-கொச்சி அரசாங்கம் மருத்துவச் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்தில் பணி புரியும் மருத்துவர்கள் எத்தனை பேர் என்ற விபரத்திற்கு குறிப்புகள் எதுவும் இல்லை.

(உ) இந்த வரம்புக்குட்பட்ட மருத்துவர்களில் ஒருவரிடமிருந்தும் இது சம்பந்தமாக முறையீடு எதுவும் இந்த அலுவலகத்திற்கு வரவில்லை. ஆனால் கன்னியாகுமரி மாவட்ட எடலாக்குடி ஆயுர்வேதிக் டிஸ்பென்சரியில் பணியாற்றும் ஒருவரிடமிருந்து அவரது பெயரை இந்தக் கழகத்தில் பதிவு செய்வதற்காக விண்ணப்பம் கிடைத்துள்ளது.

(எ) அது சம்பந்தமாக அவரது பெயரை பதிவு செய்வதற்காக மருத்துவ சான்றிதழ் திருநெல்வேலி மாவட்ட கஜானு அலுவலருக்கு விசேட அரசாங்க முத்திரை (ஸ்டாம்பு)இடுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஷை சர்டிபிகேட் இந்த அலுவலகத்தில் கிடைத்தவுடன் அவரது பெயரைப் பதிவு செய்யப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, திருவிதாங்கூர், கொச்சி அரசாங்கம் மருத்துவச் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களை, மத்திய இந்திய மருத்துவக் குழுவால் எற்படுத்தப்பட்டுள்ள பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று அரசாங்க ஆணை எண் 556 தெளிவாக சொல்லியிருந்தும், புதுக்கடையில் பணிபுரிகிற மருத்துவர், திருப்பதிசாரம் மற்றும் சில இடங்களில் பணிபுரிகிற மருத்துவர்கள் இதற்காக விண்ணப்பம் செய்து பல ஆண்டுகள் ஆகியும் சேர்த்துக் கொள்ளாமல், அவர்களுடைய கல்வித் தகுதியைப் பற்றி மேலும் மேலும் விளக்கம் கேட்டபடி இருப்பது எனக்குத் தெரியும். ஆகவே அரசு இது குறித்து மீண்டும் பரிசீலனை செய்து அத்தகைய இன்னல்கள் அவர்களுக்கு எற்படாத வண்ணம் செய்ய முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : கனம் உறுப்பினர் அவர்களிடம் இருக்கும் குறிப்பை அரசாங்கத்திடம் கொடுத்தால் நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

Doctors and Nurses

*127 *Q.*—THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the number of doctors holding degrees and the number of nurses who have applied for jobs during the current year in Tamil Nad ?

(*b*) the number of months which had elapsed since they applied for jobs ; and

(*c*) the steps taken by the Government to provide them with jobs ?

பட்டம் பெற்ற மருத்துவர்கள், நர்சுகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நடப்பு 1967–68 ஆண்டில் தமிழகத்தில் (1) பட்டம் பெற்ற டாக்டர், (2) நர்சு முறையே எத்தனை பேர் வேலைக்கு மனுச் செய்துள்ளனர்?

(இ) இவர்கள் வேலை கேட்டு மனுச் செய்து எத்தனை மாதங்களாகின்றன ?

(உ) இவர்களுக்கு வேலை கொடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. கூடிய சீக்கிரம் அவைகள் மன்றத்தின் முன் வைக்கப்படும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, ஆறு மாதங்களுக்கு முன்னால் கூட 200 டாக்டர்களும், 400 நர்சுகளும் வேலையில்லாமல் வேலைக்கு மனு செய்து கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையா ? அப்படியென்றால் அவர்களுக்கு புதிய வேலை வாய்ப்பு கொடுக்கும் வகையில் புதிய ஆஸ்பத்திரிகள் திறக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : தலைவரவர்களே, எற்கனவே குறிப்பிட்டது போல் தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. கூடிய விரைவில் அது பற்றி கவனிக்கப்படும்.